**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.92
https://ngmtamil.in/

# பத்துப்பாட்டில் மரங்களும் உவமைகளும் - சூழலியல் பார்வை

**அ. செல்லப்பா,**

முனைவர் பட்ட ஆய்வாளர், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,

பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

Chellappa1251990@gmail.com

**முனைவர் மி.கவிதா**, நெறியாளர், பேராசிரியர், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,

பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியல், பண்பாடு, இயற்கை உணர்வு மற்றும் சமூகச் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் அரிய இலக்கியப் பொக்கிஷங்களாக விளங்குகின்றன. அவற்றுள் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாக பத்துப்பாட்டு நூல்கள் தமிழர் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களையும் இயற்கையோடு இணைந்த அவர்களின் வாழ்க்கை முறையையும் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இயற்கையை வெறும் பின்னணியாக மட்டுமல்லாமல், மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதி பாடியுள்ள சங்கப் புலவர்களின் பார்வை இந்நூல்களில் வெளிப்படுகிறது.

பத்துப்பாட்டில் இடம்பெறும் மரங்கள் அக்காலச் சமூகத்தின் சூழலியல் அறிவையும் நிலவியல் புரிதலையும் உணர்த்துகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களின் தன்மைக்கு ஏற்ப பல்வேறு மரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இம்மரங்கள் உணவு, மருத்துவம், வாழ்வாதாரம் போன்ற பயன்பாடுகளை மட்டுமல்லாமல், மனித உணர்வுகள் மற்றும் சமூக நிகழ்வுகளை வெளிப்படுத்தும் உவமைகளாகவும் செயல்படுகின்றன. சங்கப் புலவர்கள் இயற்கைக் கூறுகளின் தன்மைகளை நுணுக்கமாகக் கவனித்து, அவற்றை மனிதர்களின் தோற்றம், குணம், உணர்வு மற்றும் வாழ்க்கைச் சூழல்களுடன் ஒப்பிட்டு உவமைகளாகப் பயன்படுத்தியுள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் சூழலியல் பாதுகாப்பு உலகளாவிய முக்கியத்துவம் பெற்றுள்ள நிலையில், பண்டைய தமிழர் இயற்கை பற்றிய விழிப்புணர்வையும் மரங்களின்

முக்கியத்துவத்தையும் மீளாய்வு செய்வது அவசியமாகிறது. அந்த வகையில் பத்துப்பாட்டில் இடம்பெறும் மரங்களையும் அவற்றின் உவமைகளையும் சூழலியல் நோக்கில் ஆராய்வது, சங்க இலக்கியத்தின் இயற்கைச் சிந்தனையைப் புரிந்துகொள்ள உதவுவதோடு, தமிழர் மரபில் நிலவிய சுற்றுச்சூழல் உணர்வையும் வெளிக்கொணர்கிறது. இக்கட்டுரை பத்துப்பாட்டில் இடம்பெறும் மரங்களின் இலக்கிய மற்றும் சூழலியல் முக்கியத்துவத்தை விளக்க முயல்கிறது.

**மரங்களும் உவமைகளும்**

மலைவளத்தைச் சிறப்பித்துக் கூறும் பாடலின் ஒரு பகுதியாக, ஆசினிப் பலாப்பழங்கள் முதிர்ந்து வெடித்துத் தரைமீது விதைகள் சிதறிக் கிடக்கும் காட்சியைப் புலவர் உவமை மூலம் விவரிக்கிறார்.

**"உண்ணுநர் தடுத்தன தேமா புண் அரிந்து**

**ஆரலை உக்கன நெடும் தாள் ஆசினி"** (மலைபடுகடாம்.138,139)

பழத்தில் உள்ள சாறு சிறந்து, உண்ணுபவர்களை வேறு எங்கும் செல்ல முடியாதபடி தடுக்கும் இனிய சுவை கொண்டது மாமரங்கள். சிறு பலாக் காய்கள் அரலைக் கற்கள் போல் புண்பட்டு உதிர்ந்து கிடந்தன. மலைநாட்டு வளத்தையும் மரங்களில் கனிகள் மிகுந்து பழுத்துக் கிடக்கும் காட்சியையும் உவமை வாயிலாக விவரிக்கிறார் புலவர்.

**"யாற்று அறல் புரையும் வெரிந் உடை கொழு மடல்**

**வேல் தலை அன்ன வை நுதி நெடும் தகர்**

**ஈத்து இலை வேய்ந்த எய் புற குரம்பை"**

(பெரும்பாணாற்றுப்படை.86-88)

பாலை நிலத்து எயினர்கள் வேல் போன்ற கூர்மையான பனை ஓலைகளையும், ஈச்ச இலைகளையும் கொண்டு தங்களின் வீடுகளை வேய்ந்திருந்தனர். அதாவது ஆற்று மணல் போன்ற வரியுடைய, செழிப்பான பனை மடல்களையும், வேல் போன்ற கூர்மையான முனையுடைய நீண்ட ஓலைகளையும் கொண்டு, ஈச்சம் இலைகளால் வேயப்பட்ட எயினர்களின் சிறிய குடிசைகள் உள்ளன. இவை அக்கால மக்களின் இல்ல அமைப்பை உவமையால் மிக நுட்பமாக விவரிக்கிறார் புலவர்.

**"எரி அவிர் உருவின் அம் குழைச் செயலைத்**

**தாது படு தண்ணிழல் இருந்தனம் ஆக"**(குறிஞ்சிப்பாட்டு.105,106)

அசோகமரம் எரியும் தீயைப்போல் பூத்திருந்தது. அப்பூக்கள் உதிர்ந்து சிவப்புக் கம்பளம் விரிந்தது போல் இருந்த அதன் மரத்தடியில் நிழலுக்காகத் தங்கியிருந்தோம். அதாவது இயற்கையோடு இணைந்த வாழ்வியலைச் சங்க கால மக்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்ற செய்தியை உவமையின் வாயிலாகத் தெளிவுபடுத்துகிறது இப்பாடல்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

கடியலூர் உருத்திரங்கண்ணனார், தொண்டைமானின் சிறப்பையும், அந்நாட்டு நீர்நிலைகள் மற்றும் பொழில்களின் அழகையும் உவமையால் வருணிக்கிறார்.

**“குறும் கால் காஞ்சி சுற்றிய நெடும் கொடி**

**பாசிலை குருகின் புன் புற வரி பூ**

**கார் அகல் கூவியர் பாகொடு பிடித்த**

**இழை சூழ் வட்டம் பால் கலந்தவை போல்**

**நிழல் தாழ் வார் மணல் நீர் முகத்து உறைப்ப**

**புனல் கால்கழீஇய பொழில்தொறும் திரள் கால்**

**சோலை கமுகின் சூல் வயிற்று அன்ன**

**நீல பை குடம் தொலைச்சி நாளும்**

**பெரு மகிழ் இருக்கை மரீஇ சிறு கோட்டு"**

(பெரும்பாணாற்றுப்படை.374-382)

பருத்த அடிமரத்தைக் கொண்டது காஞ்சிமரம். பச்சையான இலைகளையுடைய குருகுக் கொடி அம்மரத்தைச் சுற்றிக்கொண்டு படரும். பூத்திருக்கும் அப்பூவிதழின் அடிப்பகுதியில் வரிகள் காணப்படும். (மாதவிக் கொடியொடு குருகுக்கொடி ஒப்புமை உடையது) (குருகுக்கொடி காஞ்சி மரத்தைச் சுற்றிக் கொண்டிருப்பது போல் கையைச் சுற்றிக் கொண்டிருக்கும் வளையலும் குருகு எனப்பட்டது) குருகு சுற்றிய காஞ்சியின் நிழலானது மணலில் தேங்கியிருக்கும் நீரில் விழும். அந்த நிழலினைப் போலக் கூவியர் சுடும் வட்டம் (அப்பம்) இருக்கும். சுட்ட வட்ட அப்பத்தை அவர்கள் பாலில் கலந்து தருவார்கள். காரகல் என்னும் கருமையான வடையைச் சட்டியில் திரியிழையாகச் சுற்றி வட்டம் சுடுவார்கள். (இக்காலத்து ஜாங்கிரி போன்றது அக்காலத்து வட்டம் என்னும் பண்ணியம்) காஞ்சி மகிழ்ச்சிப் பூங்காவில் இப்பண்ணியம் (பலகாரம்) பெறலாம். பொழில்களில் புனல் பாய்ந்து மரத்தின் கால்களைக் கழுவிச் செல்லும். பொழிலில் வைத்திருக்கும் நீலப் பைங்குடங்கள் பாக்கு மரத்தின் பாளை கருவுற்றிருப்பது போல் இருக்கும். நீலம் என்னும் கள் வகையைக் கொண்டிருப்பது நீலப் பைங்குடம். இந்தக் குடத்தைத் தொலைச்சலாம், அதாவது முற்றிலுமாகப் பருகலாம். இந்தப் பகுதியைப் பெருமகிழ் இருக்கை என்பர். (பெருமகழ்ச்சி தரும் இருப்பிடம்) இந்த இருப்பிடங்களை மருவிக்கொண்டு (பயன்படுத்திக் கொண்டு) செல்லலாம்.

காஞ்சியின் நிழலினைப் போலக் கூவியர் சுடும் வட்டம் (அப்பம்) இருக்கும் என்றும் நீலப் பைங்குடங்கள் பாக்கு மரத்தின் பாளை கருவுற்றிருப்பது போல் இருகக்கிறது என்றும் உவமையால் அழகுபட விளக்குகிறார்.

**“பொற்கொன்றை மணிக்காயா**

**நற்புறவி னடைமுனையிற்"** (பொருநராற்றுப்படை201,202)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

கரிகால் பெருவளத்தானின் நாட்டில் காடுகளில் வழி நெடுகிலும் பொன் போன்ற கொன்றை மர மலர்களும், நீல நிறக் காயா மர மலர்களும் பூத்து, காண்போரைக் கவரும் வகையில் அழகாகக் காட்சியளிக்கின்றன என்று நிலத்தின் வளத்தை உவமை வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது.

**“பைந்நனை அவரை பவழம் கோப்பவும்,**

**கரு நனைக் காயா கண மயில் அவிழவும்"**

(சிறுபாணாற்றுப்படை.165)

பசுமையான அரும்புகளையுடைய அவரைக்கொடி, பவளக் கொத்துகள் போன்று செக்கச் சிவந்த பூக்களைத் பூத்திருக்கிறது. கரிய மொட்டுகளைக் கொண்ட காயாம்பூக்கள், கூட்டம் கூட்டமாக இருக்கும் மயிலின் கழுத்துப் போன்று கருநீல நிறத்துடன் மலர்ந்துள்ளது. அதாவது முல்லை நிலத்தில் அவரைப்பூக்கள் பவளம் போலவும், காயா மலர்கள் மயில் கழுத்து போலவும் பூத்துக் காணப்படுகிறது என்று இயற்கை சூழலை உவமை துணைக்கொண்டு அழகாக விளக்கியுள்ளார்.

**“இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து**

**உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்"**

(திருமுருகாற்றுப்படை.10,11)

இருள் படரும்படி நெருக்கமாக வளர்ந்த பருத்த அடிப்பாகத்தைக் கொண்ட மராஅ மரங்கள் (கடம்ப மரம்) நிறைந்த காட்டில், தேரின் உருளை போன்ற பூக்களைக் கொண்ட குளிர்ந்த கடப்ப மாலை அசைந்தாடும் மார்பினை உடையவன் முருகன். மழை பெய்த கார்காலக் காட்டில், நிழல் பரப்பி நிற்கும் பெரிய கடம்ப மரத்தின் கீழ், தழைத்து வளர்ந்த கடம்ப மலர்களால் ஆன மாலையை அணிந்த மார்பினன் முருகன் எனப் பாடினார். அதாவது முருகனின் போர்க்களக் கோலத்தையும், கடம்ப மரத்தின் மீதான அவனது பற்றையும் உவமை மூலம் விளக்குகிறார்.

**“அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்,**

**தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்,**

**கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்,**

**நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்,**

**கானல் வெண் மணல் கடல் உலாய் நிமிர்தர"**

(சிறுபாணாற்றுப்படை.146-150)

நல்லியக்கோடன் ஊருக்குச் செல்லும் வழியில் எயிற்பட்டினத்தின் வழியாகச் செல்ல வேண்டி இருக்கும். அதனை அடைய நெய்தல்நிலப் பெருவழியில் செல்ல வேண்டி வரும். அங்கே அலைமோதும் நீரில் தாழம்பூ அன்னப்பறவை போல் பூத்திருக்கும். அன்று பூத்த செருந்திப் பூக்கள் பொன் கொட்டிக் கிடப்பதுபோல் கிடந்து மருட்சியூட்டும். முண்டகப் பூக்களைக் கதிர்மணிகள் என்று எண்ணிக் கடல் அலைகள் கழுவிக்கொண்டிருக்கும். புன்னைமரம் பூத்து முத்துக்களைத் தலையில்

வைத்திருக்கும். கடற் கானல் வெண்மணலில் கடல்லை வந்து உலாவிக் கொண்டிருக்கும். அந்த நெய்தல் நிலப் பொருவழியில் சென்றால் கடலின் மணிநீர் சார்ந்த நிலத்தில், பனிநீர்ப் (நன்னீர்) பள்ளத்தில் இருக்கும் பட்டினம் ஒன்றை அடையலாம்.

இது ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனின் எயிற்பட்டின (மரக்காணம்) கடற்கரை வளத்தைக் கூறுவதாகும். நெய்தல் நிலத்தின் அழகிய இயற்கை காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறது. எயிற்பட்டினக் கடற்கரையில் தாழை, செருந்தி, முண்டகம், புன்னை போன்ற மரங்களும் மலர்களும கடலோர அழகை உவமையால் விவரிக்கும் போது கடற்கரை வளம் மேலும் வளமாகிறது.

**“நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்"**

(சிறுபாணாற்றுப்படை.149)

நீண்ட காம்புகளை உடைய புன்னை மரங்கள், முத்துக்களை (நித்திலம்) அள்ளித் தெளித்து வைத்தது போலப் பூத்துக் குலுங்குகின்றன. நலிந்த முள்ளிகள் நீல மணிகளைப் போன்று பூத்து கடல் அலையில் கழுவப்படுவதையும், புன்னை மரங்கள் முத்துக்கள் போன்ற அரும்புகளைச் சேமித்து வைத்திருப்பதையும் உவமையல் விளக்கும் போது மேலும் புலனாகிறது.

பாணன் ஒருவன் மற்றொருவனை ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனிடம் வழிநடத்தும் சூழலில், எயிற்பட்டினத்தின் கடலோர அழகு இந்த வரிகளில் உவமையாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

**“ ……………………… கேழலொடு**
**இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன**
**குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்"**

(திருமுருகாற்றுப்படை.311-313)

காட்டுப்பன்றிகளுடன், கரிய பனை மரத்தின் உட்பகுதியை (வெளிற்று) போர்த்தியது போன்ற, நிறமுடைய முடிகளை உடைய உடல். அதாவது, முதிர்சோலையின் அடர்ந்த காட்டில், கரிய பனைமரத்தின் ஈர்க்குப் போல நிறமுடைய முடிகளையும், வளைந்த பாதங்களையும் உடைய உளியம் என்னும் விலங்கு, காட்டுப் பன்றிகளுடன் சேர்ந்து திரியும் காட்சி விவரிக்கப்பட்டுள்ளது. இது முருகப்பெருமான் வீற்றிருக்கும் மலையின் இயற்கைப் பெருமையை உவமையால் உணர்த்துகிறது.

**“மயிலோ ரன்ன சாயல் மாவின்**
**தளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத்து"** (மதுரைக் காஞ்சி.706)

மயிற்பீலி போன்ற சாயலும், மாந்தளிர் போன்ற மேனியும், அதில் மென்மையான தேமல் அரும்பிய அழகும் கொண்ட பெண்கள் என்று மதுரையில் வாழும் மகளிரின் அழகை உவமையால் புகழ்ந்து பாடுகிறார்.

**“தலை நாள் பூத்த பொன் இணர் வேங்கை**
**மலைமார் இடூஉம் ஏம பூசல்"** (மலைபடுகடாம்.305,306)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

வருடத்தின் முதல் நாளில் (இளவேனிற் காலத்தின் தொடக்கத்தில்) பூத்த, பொன் போன்ற கொத்துகளை உடையது வேங்கை மரம். வேங்கை மரத்தின் மலர்கள் பொன் போன்று இருக்கிறது என்று உவமையால் கூறப்பட்டுள்ளது.

மேலும், வேங்கை மலர்களைச் சூடிக்கொள்வதற்காக, குறமகள் (மலைவாழ் பெண்கள்) "புலி! புலி!" என்று கூப்பிடும் ஆரவாரம். வேங்கை மலர்கள் புலி போலத் தோற்றமளிப்பதால், அவற்றைப் பறிக்க மலைவாழ் பெண்கள் எழுப்பும் அச்சம் தீர்ந்த (பாதுகாப்பான) ஆரவாரம் இதுவாகும்.வேங்கை மரம் பூத்து, அதன் மலர்கள் தரையில் உதிர்ந்து கிடக்கும்போது, அது புலி பதுங்கி இருப்பது போலத் தோன்றும். அதனைக் கண்டு குறமகள் மகிழ்ச்சியில் "புலி! புலி!" என்று ஆரவாரம் (ஏமப் பூசல்) செய்வர். இந்த ஆரவாரத்தைக் கேட்டு, பெண் யானை தன் கன்றை அணைத்துக்கொண்டு, புலி வந்துவிட்டதோ என அஞ்சி நடுங்கும். இந்த இயற்கை காட்சியை உவமையால் நுணுக்கமாகப் பாடியுள்ளார்.

**"புகர் இணர் வேங்கை வீ கண்டு அன்ன**

**அவரை வான் புழுக்கு அட்டி பயில்வுற்று"**

(பெரும்பாணாற்றுப்படை.194,195)

முல்லை நிலத்து ஆயர் மகளிர், செந்நெல் அல்லது வரகு அரிசிச் சோற்றுடன் அவரை விதையைச் சேர்த்துச் சமைக்கும் உணவு, வேங்கை மரத்தின் பூக்கள் பூத்துக் குலுங்குவது போன்று வெண்மையாக இருக்கும். அந்தச் சுவையான உணவைப் பாணர்கள் உண்டு மகிழ்வார்கள் என்று உவமையால் உணர்த்துகிறது.

**"புகழா வாகை பூவின் அன்ன**

**வளை மருப்பு ஏனம் வரவு பார்த்திருக்கும்"**

(பெரும்பாணாற்றுப்படை.109,110)

குறுங்காட்டு வழியில், பன்றி அகத்திப்பூ போன்ற வளைந்த தன் தந்தங்களை மறைத்துக்கொண்டு, வரும் விலங்குகளை வேட்டையாடப் பதுங்கி இருக்கும் காட்சியை உவமையால் விவரிக்கும் போது செய்யுள் மேலும் அழகாகிறது.

**"எரி கான்று அன்ன பூ சினை மராஅத்து"** (மலைபடுகடாம்.498)

நெருப்பைக் கக்கியது போன்ற சிவப்பு நிறப் பூக்களைக் கொண்ட கிளைகளை உடைய கடம்ப மரம். அதாவது மலைபடுகடாமில், நவிர மலையின் இயற்கை வளத்தையும், அங்குள்ள மரங்களையும் வர்ணிக்கும்போது இந்தப் பாடல் வரி வருகிறது. கடம்ப மரத்தின் பூக்கள் நெருப்புப் பிழம்பு போலக் கொத்துக் கொத்தாகப் பூத்திருக்கும் காட்சியைக் கவிஞர் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் உவமையால் மிக அழகாக விவரித்துள்ளார்.

**"பாசிலை ஒழித்த பராஅரைப் பாதிரி**

**வள் இதழ் மா மலர் வயிற்று இடை வகுத்ததன்**

**உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சை"**

(பெரும்பாணாற்றுப்படை.4-6)

கடுமையான வேனிற்காலத்தில் (கோடையில்) இலைகளை உதிர்த்துவிட்டு, பருத்த அடிமரத்தோடு பூத்து நிற்கும் பாதிரி மரத்தின் பெரிய பூவின் இதழ்களைப் பிளந்தால் அதன் நடுவில் ஒரு சிவப்பு நிறம் காணப்படும். அந்தப் பாதிரிப் பூவின் உட்புறத்தைப் போலவே, சிவந்த சாயம் ஏற்றப்பட்டு, யாழின் குடத்திற்குப் போர்த்தப்பட்ட தோல் (பச்சை) அமைந்துள்ளது.

பெரும்பாணனின் யாழ் அவ்வளவு நுணுக்கமாகவும், பாதிரிப் பூவின் இதழ் போல மென்மையாகவும், அதன் உள்ளே இருக்கும் செந்நிறம் போலப் பொலிவுடனும் இருந்தது என்பதை உணர்த்த இப்பாடல் அமைந்துள்ளது.

இந்த வருணனை, யாழ் செய்யப் பயன்படுத்தப்பட்ட தோலின் நிறத்தையும், யாழின் பத்தர் (குடம்) பகுதியையும் ஒப்பிட்டுக் காட்டும் உவமைச் சுரங்கம் எனக் கூறப்படுகிறது.

**"புலவு நீர் வியன் பௌவத்து**

**நிலவுக் கானல் முழவுத் தாழை..."** (மதுரைக் காஞ்சி.113,114)

மீன் நாற்றம் வீசும் அகன்ற பெரிய கடலையும், நிலவொளி வீசும் கடற்கரைச் சோலையில் மத்தளம் போன்ற தண்டுப்பகுதியை உடைய தாழை மரங்கள் நிறைந்த இடத்தையும் உடைய (பாண்டியனின் நெய்தல் நிலப் பகுதி)

**"வண்ணக் கடம்பின் நறு மலர் அன்ன**

**வளர் இளம் பிள்ளை தழீஇக் குறும் கால்"**

(பெரும்பாணாற்றுப்படை.203,204)

வண்ணக் கடம்பின் நறுமலர் (சிவப்புஃவெள்ளை நிறக் கடம்பு) பார்ப்பதற்கு எப்படிப் பொரிந்து, கொத்தாக, அழகாக இருக்குமோ, அதேபோல அந்தப் பன்றிக்குட்டிகள் அழகாக இருப்பதாகவும், அந்தப் பன்றி (தாய்ப்பன்றி) தன் இளம் குட்டிகளை அணைத்துக்கொண்டு, அதன் குட்டையான கால்களுடன் வளைந்த காட்டில் தங்கி இருக்கும் காட்சி, என்னும் கருத்தைத் தருகிறது. இது ஒரு அழகான இயற்கை காட்சி (யேவரசந ஐஅயபநசல). கடம்பின் நறுமலர் – பன்றிக்குட்டிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பத்துப்பாட்டு நூல்கள் இயற்கையையும் மனித வாழ்க்கையையும் பிரிக்க முடியாத ஒன்றாகக் கருதி உருவாக்கப்பட்ட இலக்கியங்களாகும். அவற்றில் இடம்பெறும் மரங்கள் வெறும் தாவரங்களாக அல்லாமல், அக்கால மக்களின் வாழ்க்கை, பண்பாடு, பொருளாதாரம் மற்றும் உணர்வுகளோடு இணைந்த அடையாளங்களாக விளங்குகின்றன. புலவர்கள் மரங்களின் இயல்புகளையும் அவை

வளரும் சூழல்களையும் ஆழமாக உணர்ந்து, மனித வாழ்க்கை நிகழ்வுகளுக்கு உவமைகளாகப் பயன்படுத்தியிருப்பது அவர்களின் இயற்கை அறிவையும் கலைநயத்தையும் புலப்படுத்துகிறது.

பத்துப்பாட்டில் காணப்படும் மர உவமைகள் இலக்கிய அழகை மட்டுமல்லாது, இயற்கையோடு ஒத்திசைவாக வாழ்ந்த தமிழர் சமூகத்தின் சூழலியல் சிந்தனையையும் வெளிப்படுத்துகின்றன. மரங்களின் வளர்ச்சி, பயன், தோற்றம் மற்றும் சூழல் சார்ந்த பண்புகள் மனித உணர்வுகளுடன் ஒப்பிடப்பட்டுள்ள விதம், இயற்கையையும் மனிதனையும் ஒரே உயிர்முறையின் பகுதிகளாகக் கருதிய பார்வையை உணர்த்துகிறது. இதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதும் அவற்றின் மதிப்பை உணர்வதும் தமிழர் வாழ்வியலின் அடிப்படைக் கூறாக இருந்தது என்பது தெளிவாகிறது.

எனவே, பத்துப்பாட்டில் இடம்பெறும் மரங்களும் அவற்றின் உவமைகளும் இலக்கியச் சிறப்பை மட்டும் சுட்டிக்காட்டாமல், இயற்கை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான ஆழ்ந்த கருத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன. இன்றைய சூழலியல் நெருக்கடிகள் நிறைந்த காலத்தில், சங்க இலக்கியங்களில் வெளிப்படும் இத்தகைய இயற்கை மையச் சிந்தனைகள் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டும் பண்பாட்டு மரபுகளாக அமைகின்றன. பத்துப்பாட்டின் வழி வெளிப்படும் மரங்களும் உவமைகளும் தமிழர் சூழலியல் அறிவின் சிறப்பையும் அதன் தொடர்ச்சியான தேவையையும் வலியுறுத்துகின்றன.